D E P O S I T I O N  O F  W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.11/2021

**P.W**.2

| | |
|---|---|
| Name | : **திரு.ஜெகந்நாதன்** |
| Father/Husband Name | : திரு.ராமநாதன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**1 முதல் 4 எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.02.2023

**முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது கல்பாக்கத்தில் குடியிருந்து பாவனியில் வேலை செய்து வருகிறேன். சாட்சி விஷ்வநாதனை தெரியும்.**

**2) கடந்த 2018ம் வருடம் நான் அணுமின்நிலையத்தில் ஓல்டு சி.எம்.எம்.எல் வேலை செய்தேன். அந்த நிறுவன கட்டிடத்தின் பூட்டு சாவிகளை முறைப்படி நியூ சி.எம்.எம். கட்டிடத்திலிருந்து பெற்று வந்து தினமும் திறப்போம். வேலை முடித்து மீண்டும் அங்கு ஒப்படைத்து விடுவோம். கடந்த 2018ம் வருடம் ஒரு நாள் நியூ சி.எம்.எம். கட்டிடத்தில் லீபர்க் கிரேணின் உதிரி பாகங்கள் திருடு போயிவிட்டதாக கேள்விபட்டேன். அந்த உதிரி பாகங்கள் நியூ சி.எம்.எம். கட்டிடத்தில் வைக்கப்பட்டிருந்தன. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.**

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை,**</u>

நான் பணிபுரிந்த கல்பாக்கம் அணுமின் நிலைய வளாகம் மிகுந்த பாதுகாப்புடன் மத்திய தொழில் பாதுகாப்பு படையினரின் கண்காணிப்புடன் இருக்கும் என்றால் சரிதான். உள்ளே வந்துசெல்லும் நபர்கள் மற்றும் வாகனங்கள் தீவிர கண்காணிப்பிற்கு பிறகே அனுமதிக்கப்படுவார்கள் என்றால் சரிதான். அங்குள்ள ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தனித்தனியாக செக்யூரிட்டி பணியாளர்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். அவர்கள் தீவிரமாக கண்காணித்து தான் அனுமதிப்பார்கள் என்றால் சரிதான். நான் பணியாற்றிய காலத்தில் எங்கள் நிறுவனத்தில் பணி நேரம் காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை இருந்தது. மாலை 5.30 மணிக்கு எங்கள் நிறுவனத்தை பூட்டி சாவியை செக்யூரிட்டி பணியாளரிடம் ஒப்படைப்போம். அதன்பிறகு நிறுவன பணியாளர்களுக்கு கூட அங்கு இருக்க அனுமதியில்லை என்றால் சரிதான். பொதுவாக காலை 8.30 மணி முதல் 8.45 மணிக்குள் சாவியை பெற்று கட்டிடத்தை திறப்போம். 2018 ம் ஆண்டு நியூ சி.எம்.எம். கட்டிடத்தில் பொருட்கள் திருடு போனதாக நான் கேள்விபட்டதாக சொல்லியுள்ளது தவறான சங்கதிகள் என்றால் சரியல்ல.

Certified that the examination of the accused was taken by me and that the records contains full and true on account of the statement made by him/her. It has been read over to him/her and admitted by him/her to be correct.

Sd/-A.Kadhiravan,
J.M/TKM.

Crl.Misc.39

D E P O S I T I O N O F W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.11/2021

**P.W**.3

| | |
|---|---|
| Name | : **திரு.வாசுதேவன்** |
| Father/Husband Name | : திரு.பாலசுப்பிரமணி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.02.2023

**முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது அனுபுரம் பாவினி டவுன் சிப்பில் குடியிருந்து பாவினியில் மெக்கானிக்கல் மெயின்டனஸ் யூனிட்டில் டெக்கினிஷியனாக வேலை செய்து வருகிறேன். சாட்சி விஸ்வநாதனை தெரியும்.**

**2) கடந்த 24.9.2018 க்கு முன்பாக லிபர்ன் கிரேண் உடைய உதிரி பாகங்கள் வந்ததாக என்னுடைய மேல் அதிகாரி வசிஸ்டகுமார் பாண்டே என்பவர் சொன்னதின் பேரில் உதிரி பாகங்களை அடையாளப்படுத்தி பிரித்து வைப்பதற்காக நானும், ஹெல்பர் சக்திவேல் என்பவரும் சென்று லிஸ்ட் படி சரிபார்த்தோம். சரியாக இருந்தன. பிறகு சி.எம்.எம்.இல் அதை பிரித்து வைத்து விட்டார்கள். கடந்த 29.9.2018 ம் தேதி மேல் அதிகாரி எங்களை சரிபார்த்த பொருட்களில் குறைபாடு ஏதாவது உள்ளதா என்று**

சரிபார்க்க சொன்னார். 2 வதுமுறை நாங்கள் சென்று சரிபார்த்தோம். அதில் 8 எண்ணிக்கைகளில் கப் லிங்குகள் இல்லாததை தெரிந்து கொண்டு அங்கு சி.எம்.எம்.இல் இருந்த பணியாளர்களிடம் தேடி வைக்க சொல்லிவிட்டு வந்துவிட்டோம். இது குறித்து மேல் அதிகாரிக்கு தகவல் சொன்னோம். அதன்பிறகு நான் வேறு பணிக்காக சென்றுவிட்டேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை,</u>

போலிஸ் விசாரணையின்போது இரண்டு மரப்பெட்டிகளில் இருந்த உதிரி பாகங்களை அதன் பொறுப்பு பொறியாளர் சரிபார்த்துள்ளார் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அந்த பொறுப்பு பொறியாளர் யார் என்று குறிப்பிட்டு சொன்னேனா என்றால் இல்லை. நானும், சக்திவேலும் சேர்ந்து பொருட்களை சரிபார்த்ததாக போலிஸ் விசாரணையின் போது குறிப்பிட்டு சொன்னேனா என்றால் சொன்னேன். அவ்வாறு போலிஸ் விசாரணையின் போது நான் சொல்லவில்லை என்றாலும் தற்போது தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. போலிஸ் விசாரணையின்போது நான் எந்த கேடரில் வேலை பார்த்தேன் என்று குறிப்பிட்டு சொன்னேனா என்றால் இல்லை. என்னுடைய முதல் விசாரணையில் சொன்ன நானும், சக்திவேலும் வசிஸ்டகுமார் பான்டே சொன்னதின் பேரில் பொருட்களை சரிபார்த்தோம் என்பதையும் சி.எம்.எம்.இல் அதை பிரித்து வைத்தார்கள் என்றும் போலிஸ் விசாரணையின் போது சொன்னேனா என்றால் சொன்னேன். 2 வது முறையாக மேல்அதிகாரியின் அறிவுறுத்தல் படி பொருடகளை மீண்டும் சரிபார்த்ததில் சில பொருட்கள் காணாமல் போயிருந்ததாக தகவல்

தெரிவித்தோம் என்று போலிஸ் விசாரணையின் போது சொன்னேனா என்றால் சொன்னேன். நான் முதல் விசாரணையின் சொன்ன விவரங்களை போலிஸ் விசாரித்தபோது சொல்ல வில்லை என்றாலும் தற்போது தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கு வழக்கு குறித்த விவரங்கள் எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த மறுநாள் நான் காவல் நிலையம் சென்றதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சமயத்தில் 2018 ம் ஆண்டு போலிசார் எங்களை விசாரணை செய்தார்கள். 2018 ம்ஆண்டு போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய உயர் அதிகாரிக்கு பவ்வியப்பட்டு அவர் சொன்னபடி நான் வழக்கிற்காக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. டி.ஏ.இ. வளாகம் மிகவும் பாதுகாப்பு உள்ள பகுதி என்றாலும் அதில் பொருட்கள் காணாமல் போனதாக சொல்வது பொய் என்றாலும் சரியல்ல.

Certified that the examination of the accused was taken by me and that the records contains full and true on account of the statement made by him/her. It has been read over to him/her and admitted by him/her to be correct.

Sd/-A.Kadhiravan,
J.M/TKM.